# வெட்டுக்காயங்களுடன் எரிந்த நிலையில் வீதியில் ஐம்பது தமிழ் பெண்களின் சடலங்கள்!

## மட்டக்களப்பில் கொடூரம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் வீதியோரங்களில் ஐம்பது தமிழ்ப் பெண்களின் சடலங்கள் நேற்று வெட்டுக் காயங்களுடனும், அரைகுறையாக எரிந்த நிலையிலும், அநாதரவாகக் கிடக்கக் காணப்பட்டன.

இச்சம்பவத்தினால் மட்டக்களப்பில் பெரும் பதற்றநிலை காணப்படுகிறது.

சிறிலங்கா அரசுப் படைகளின் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தபோது இச்சம்பவம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி)


விலை ரூபா 4-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 32 மார்கழி 10 ஜ. ஆகிர் பிறை 7 இதழ்: 244

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 25-12-1990


## இராமசேவகர் பிரிவு ஆயிரமாக அதிகரிக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்போது 75 கிராம சேவை அலுவலர் பதவி வெற்றிடம் காணப்படுகிறது.

யாழ் மாவட்டத்தில் 435 கிராமசேவை அலுவலர் பிரிவுகள் உள்ளன.

300 குடும்பங்களுக்கு ஒரு கிராமசேவை அலுவலர் பிரிவு என்ற ரீதியில் யாழ். மாவட்டத்தில் 1 000 கிராமசேவை அலுவலர் பிரிவுகள் உருவாக்கப்பட உள்ளன. (153

## சுற்று நிருபங்கள் சிங்களத்தில்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் திணைக்களம் வடபகுதிக்கு அனுப்பிவைக்கும் சுற்று நிருபங்கள், கடிதங்கள் யாவற்றையும் தனிச் சிங்களத்திலேயே அனுப்பி வருகின்றது.

இதனால் யாழ். மாவட்டச் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளும், ஊழியர்களும் பெரிதும் சிரமமும், அவதியும் அடைந்து வருகின்றனர். (54)

# ஹொரவப்பொத்தானையில் புலிகளின் சக்திவாய்ந்த கண்ணிவெடியில் சிக்கி 19 இராணுவத்தினர் பலி!

### 6 படையினர் நிலை கவலைக்கிடம்; வாகனம் வெடித்து சிதறியது

(அனுராதபுரம்)

அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள ஹொரப்பொத்தானை என்னுமிடத்தில் நேற்றுக் காலை விடுதலைப்புலிகளினால் வைக்கப்பட்ட சக்திவாய்ந்த கண்ணிவெடியில் சிக்கி பத்தொன்பது இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே பலியானார்கள். ஆறு படையினா படுகாயமடைந்தனர். படையினர் பயணம் செய்த வாகனம் வெடித்துச் சிதறி முற்றுகச் சேதமடைந்தது.

நேற்றுக்காலை 8-30 மணியளவில் மொரவேவா என்னுமிடத்திலிருந்து உடல் நலம் குன்றிய, காயமடைந்த படையினரை ஆஸ்பத்திரிக்கு ஜீப் ட்ரக் மற்றும் கனரக வாகனங்களில் கொண்டுசென்ற போது ஹொரவப்பொத்தனையில் இந்த கண்ணிவெடிச் சம்பவம் இடம்பெற்றது.

(4-ம் பக்கம் பார்க்க)

## நொச்சியாகமத்தில் 6 இராணுவம் பலி

(அநுராதபுரம்)

அநுராதபுரம் பேய்மடு இராணுவ முகாமிலிருந்து கனரக வாகனங்கள் சகிதம் ரோந்துசென்ற இராணுவத்தினர்மீது புலிகள் திடீர்தாக்குதல் மேற்கொண்டதில் ஆறு இராணுவத்தினர் அதே இடத்தில் கொல்லப்பட்டதுடன் வாகனங்களும் சேதமாக்கப்பட்டதுடன் பெரு

(4ம் பக்கம் பார்க்க)

## வீர மரணமடைந்த புலிகளுக்கு வீரவணக்கம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் லெப். ராஜன் (சிவஞானசுந்தரம்

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தில் மேலும் 6 உ.அ.அ. பிரிவு உருவாகும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் புதிதாக ஆறு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவு, மானிப்பாய், காரைநகர். கொடிகாமம்,

(4-ம் பக்கம் பார்க்க)


வாசகநேயர்கள்,
விளம்பரதாரர்கள்,
விற்பனையாளர்கள்
அனைவருக்கும்
'ஈழநாடு'
தனது
நத்தார்
வாழ்த்துக்களை
தெரிவித்துக்
கொள்கிறது.

—நிர்வாகி


## மாவிட்டபுரத்தில் மோதல்: 4 போராளிகள் வீர மரணம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் மின் முகாமில் இருந்து முன்னேற முயன்ற சிறிலங்காப் படையினரை இடைமறித்து நேற்று முன்தினம் புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

இத்தாக்குதலை அடுத்து இராணுவத்தினர் பலத்த இழப்புக்களுடன் பின்வாங்கினர்.

(4ம் பக்கம் பார்க்க)

## இம்மாதம் 27-ம் 28-ம் திகதிகளில் மண் மீட்பு நிதி செலுத்த ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது

[யாழ்ப்பாணம்]

தமிழீழ மீட்பு நிதிக்கு இரண்டு பவுணும் மேலதிகமாகவும் பங்களிக்க ஒப்புதலளித்த நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய், உடுவில், சங்கானை, தெல்லிப்பளை ஆகிய

(4ம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாணம் குறித்து பி. பி. ஸி. தொலைக்காட்சியினர் செய்திப் படம் தயாரிப்பு

(லண்டன்)

கிழக்கு மாகாணத்தில் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட பொதுமக்களின் நிலை பற்றி பி. பி. ஸி. யின் தொலைக்காட்சிப் பிரிவு செய்திப்படமொன்றை தயாரித்துள்ளது.

இதற்காக அண்மையில் எண்மர் அடங்கிய குழு ஒன்று அம்பாறை, மட்டக்களப்பில் படப்பிடிப்பை நடாத்தியுள்ளது.

இதன்போது பல அதிர்ச்சியூட்டும் சம்பவங்கள் தமக்கு ஏற்பட்டதாகவும் அக்குழுவுடன் சென்ற ராய்ட்டர் நிருபர் ரீட்டா செபஸ்ரியன் தெரிவித்துள்ளார். (ரி)

## உணவுப்பொருள், மருந்துகள் தொடர்ந்து தட்டுப்பாடு

### சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திற்கு புகார்

(யாழ்ப்பாணம்)

மக்களுக்கு அத்தியாவசிய உணவுப்பொருட்கள், மருந்து வகைகள் கிடைக்கவில்லை. ஆஸ்பத்திரிகளிலும் மருந்து இல்லாமல் நோயாளர் பாதிக்கப்பட்டுள்ளனர். முக்கிய மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு விலைவாசி ஏற்றம் கண்டுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைக் குழுவிடம் யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினர் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 256, பருத்தித்துறை வீதி, நல்லூர்; ''அரவிஜவுளியகம்'' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (சி-4158)

## ''அக்கினி''

மீரா வெளியீடு மண்மீட்பு, சமூக மீட்பு குரல்கள் ஓங்கி ஒலிக்கும் இக்காலகட்டததில் மலரும் புரட்சிப் படைப்பு செங்கை ஆழியானின் ''அக்கினி'' (148 பக்கங்கள்) 02-01-1991ல் வெளிவருகிறது. துர்க்கா ஸ்ரேசனேஸ் சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி, யாழ்ப்பாணத்தில் சகல புத்தகசாலைகளிலும் பெறலாம். (சி-4202)

## பரீட்சை (ஆண்டு 5)

பிரபல பாடசாலைகளுக்கான மாதிரி அனுமதிப் பரீட்சை (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 30-12-90 ஞாயிறு மு. ப. 8.00 - பி.ப 10-00க்கு 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம், அரசடி (மக்கள் வைத்திய சாலை முன்பாக) கொக்குவில் மேற்கு நடைபெறும். பதிவு செய்யவும். மாதிரி வகுப்புகளும் ஆண்டு 5,4 புதிய வகுப்புகளும் ஆரம்பமாயுள்ளன. (சி-4206)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## படிப்பு வட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஐக்கிய நாடுகள் சங்கத்துடன் இணைந்த படிப்பு வட்டத்தை பாடசாலைகளிலும், பல்கலைக் கழகங்களிலும். கல்வி நிறுவனங்களிலும் அமைக்க கல்வியமைச்சின் பாடவிதான செயற்பாட்டுக்கிளை நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. (153)

## மரம் நாட்டு விழா

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 'லியோ கழகத்தினர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் மரம் நாட்டுவிழாவொன்றினை கடந்த வாரம் நடத்தினர்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி உப அதிபர் திரு. தர்மன் குலத்துங்கப் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு மரம் ஒன்றை நாட்டி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

# என்ன சங்கதி?

நாய் பிடிக்கும் வண்டில் யாழ். நகர் வீதி ஒன்றில் செல்கறது வீதியில் நாய்கள் இல்லை. அந்த வண்டிக்குள்ளும் இலலை.

அந்த வீதியில் உள்ள வீடொன்றிலிருந்து ஒரு முதியவர் வெளியில் வருகிறார். வண்டில்காரரை கைதட்டி நிறுத்துமாறு கூறுகிறார்.

அன்போடு வளர்த்த நாயைக் கட்டியணைத்து தூக்கி வந்து அந்த வண்டிக்குள் போடுகிறார். உள்ளே போன நாய் எஜமானைப் பார்த்துப் வாலை ஆட்டுகிறது, பார்க்க பரிதாபமாக இருந்தது.

அந்தநாயின் உடலெங்கும் சொறிபிடித்து, மயிர்கள் உதிர்ந்த நிலையில் மிக மெலிந்திருந்தது. சரியான உணவில்லை.

மக்களுக்கே உணவில்லை. பலர் சோற்றை பார்த்தே பலநாள். இலவச உணவுபெறும் முகாம்களில் அகதிகள் 3 நாட்கள் பட்டினி பசிக்கொடுமையால் சிறுவன் அரிசி தின்னும் பரிதாபம். இந்த நிலையில் நாய், பூனைகளை கவனிக்க முடியுமா? அரசின் பொருளாதார தடையினால் அடுப்பு புகையாமல், மக்கள் வயிறு புகைந்து பின்னர் மனம் புகைந்து இப்படி நாட்கள் செல்கிறது. இப்படி எந்நாளும் புகைந்து கொண்டு இருக்காது. ஒருநாள் எரியத்தான் போகிறது.

'ஊரோடி'

## தவறிவிட்டது

அராலித்துறைக்கும் புங்குடுதீவுக்குமிடையில் அ. இராஜலிங்கம் என்பவரின் அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தகவல் தரவும்.

விநாயகர் ஸ்ரோர்ஸ், புங்குடுதீவு - 8.

(சி-4204)

## 3 மாதம் பாடசாலை வராத ஆசிரியர்கள் பதவியிழந்தவராவார்

(உடுவில்)

மூன்று மாதகாலம் தொடர்ச்சியாக பாடசாலைகளுக்கு எதுவித அறிவித்தல்களுமின்றி வருகைதராது இருக்கும் ஆசிரியர்களது விபரம் திரட்டப்படுகிறது.

20-9-90 முதல் 19-12-90 வரை பாடசாலைக்கு வராத ஆசிரியர்களின் விபரங்களை உடனடியாகக் கொத்தணி அதிபர்கள் மூலம் தமக்கு அனுப்பிவைக்குமாறு மருதனாமடம் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். கே. குலசேகரன் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

இவ்வாறு எதுவித அறிவித்தலுமின்றி மூன்று மாதம் தொடர்ச்சியாக வருகை தராத ஆசிரியர்கள் தாமாகவே பதவியிலிருந்து விலகியவர்களாகக் கருதப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (109)

# இராசி பலன்

**25-12-1990**

**செவ்வாய்க்கிழமை**

அட்டமி பி. ப. 3 27வரை. உத்தரட்டாதி மாலை 5 30 வரை. அமிர்தசித்தயோகம். இராகுகாலம் 3 26 முதல் 4 56 வரை. நல்லநேரம் காலை 10.56 முதல் 12.26 வரை.

மேடம்- உடல்நிலைபாதிப்பு, தொழில் போட்டி, அந்நிய வாசம், பெரியோர் ஆசி.

இடபம்- காரியவெற்றி, உல்லாசப் பயணம், வீண் பிரயாசம், குடும்ப மகிழ்ச்சி, அதீத யோசனை.

மிதுனம் - புதிய உறவு. தொழில் குறைபாடு, வேலையாட்கள் சகாயம், குடும்பப் பிரிவு

கடகம்-கடிதத் தொல்லை, மனக்குளப்பம், கண்ணியக் குறைவு. குடும்பச் சச்சரவு. வேற்றுமை.

சிங்கம் - கடும் போக்கு, குடும்ப அலைச்சல், தொழில் நஷ்டம், எதிர்பாராத தொல்லை.

கன்னி-மன மகிழ்ச்சி, தொழில் மாற்றம், புதிய உறவு, குடும்ப உற்சாகம், ஆலய தரிசனம்.

துலாம்-உறவினர் வருகை, தொழில் லாபம், சகோதரர் உதவி, மனைமாற்றம்.

விருச்சிகம் - உறவினர் தொல்லை, தொழில்குறைவு, வைத்தியச்செலவு, குடும்பக் கவலை.

தனுசு' தடுமாற்றம், குறைகேட்டல், குடும்பத்தில்செலவு, காரியத் தாமதம், பணவரவு

மகரம்-தாய்வழி உதவி, சுபகாரியச்செலவு, பொதுத்துறை ஈடுபாடு, குடும்பத்தில் சந்தோசம்.

கும்பம்-கண்ணில் ரோகம், மனக்குறை, சோம்பல், குடும்ப சச்சரவு. அகாலபோசனம்.

மீனம்-காரியபலிதம், குடும்ப நன்மை, தொழில் லாபம், அதிகாரிகள் பாராட்டு.

**ஜோஸ்யர்.**

# ஈராக்கில் தங்கியிருக்கும் 6000 இலங்கையர்

(கொழும்பு)

ஈராக்கில் ஆறாயிரம் இலங்கையர் எந்தவித நெருக்கடியுமின்றி இருப்பதாக தொழில் தொழில்துறை பயிற்சி அமைச்சர் எம். பிரேமசந்திர அறிவித்துள்ளார்.

இவர்கள் விரும்பினால் இலங்கைக்கு இலவசமாக அழைத்து வரப்படுவார்கள் எனவும் அவர் கூறினார்.

மேற்படி 6000 பேரினதும் பெயர் விபரங்களை பெறுவதற்காக இலங்கை அரசு ஈராக் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளது. (எஸ்)

## தமிழீழ போக்குவரத்துக் காவல்துறையினரின் விளம்பரம்

போக்குவரத்துக் காவலர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அடிப்படைத் தகைமைகள்:**

1. உயரம் - 5 அடி 6 அங்.
2. மார்பளவு - 32 அங். (மூச்சுவெளியேறிய நிலையில்)
3. வயதெல்லை - 01-01-1991ல் 18 தொடக்கம் 30 வரை.

**கல்வித் தகைமை:**

க. பொ. த. சாதாரணம் தமிழ் மொழி அல்லது தமிழ் இலக்கியத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**விசேட தகைமைகள்:**

1. சாரணியம்
2. முதலுதவிப் படை
3. விளையாட்டு

இதில் ஏதாவது ஒன்றில் அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:**

1. உதவிப்பணம் வழங்கப்படும்.
2. யாழ்மாவட்டத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் 30-12-1990க்கு முதல் அல்லது அன்று சொந்தக்கையெழுத்தில் தயாரித்து பின்வரும் முகவரியில் நேரில் கையளிக்கவும்.

போக்குவரத்துக் காவல்துறை,
கோண்டாவில்.

(எ-947)

## இன்று ஆரம்பம்

SCIENCE ACADEMY

Nallur.

**PHYSICS**

**ELECTRICITY**

**25-12-90**

TUE. 4-00 P. M. (சி-4208)

## கம்பியூட்டர் கல்வி

**Diploma in Data Processing and Computer Programming in Basic Language**

ஆரம்பம் 29 DEC. 1990 1-30 P. M.
(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)
26 DEC. 1990 1-30 P. M.
(திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்)

O/L படித்த இரு பாலாரும் சேரலாம். மிகவும் விளக்கமான முறையில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.




UNIKCO COMPUTER CENTRE

NO. 37, CLOCK TOWER ROAD, JAFFNA.

(வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்) (ஏ 949)

## தர்மவழி திருநாள்!

குழந்தைகள் தெய்வத்தின் திருஉருவங்கள்! தேவாதி தேவனே குழந்தை வடிவில்பிறந்த உன்னத திருநாளை இன்று உலகம் முழுவதிலும் 'கிறிஸ்மஸ்' திருவிழாவாக கொண்டாடப்படுகிறது!

'பெத்லகேம்' சிற்றூர். மாதமோ மார்கழி' கொட்டும் பனி தங்குவதற்கோ இடமின்றி அகதிகளாக அலைந்த நிறைமாதக் கர்ப்பிணியாம் அன்னை மேரிக்கு தஞ்சமளித்தது பாழடைந்த மாட்டுத்தொழுவம்!

நள்ளிரவுக் கடுங்குளிரில் வாய்பேசா மந்தைகளின் மத்தியில் கந்தை துணிகளுக்கும் வழியின்றி உலக இரட்சகர் இயேசு திருக்குழந்தையாக பிறந்தார்.

இத்திருநாளை உலகின் மூலைமுடுக்கெல்லாம் வாழும் கிறிஸ்தவர்கள் கொண்டாடும் இவ்வேளையில் அதே வடிவில் உதித்த பிஞ்சுக் குழந்தைகள் நூற்றுக்கணக்காக எமது மண்ணில் பஞ்சத்துக்கும், கோர வெள்ளத்துக்கும், கொடிய இராணுவ கொடூரங்களுக்கும் பலியாகி வருகின்றன!

குழந்தைகளைக் கொல்வதும், கோர மரணத்துக்கு உட்படுத்துவதும் கொடுமையிலும் கொடுமை!

குழந்தை இயேசுவைக் கொல்லும் சதி அன்றும் நிகழ்ந்தது!

உரோம சாம்ராஜ்யத்தின் ஆட்சிக்கும் அடக்குமுறைக்கும் உட்பட்டு கிடந்த இஸ்ரேல் மக்கள் தமக்கு விடுதலை பெற்றுதரும் வீரர், ''இரட்சகர்'' பிறந்துவிட்டார் என்று நம்பினர்.

ஆனால், மன்னன் 'எரோது' என்பவனே தனது ஆட்சிக்கு ஆபத்து வந்தது என்று அஞ்சி ஏழு மாதங்களுக்கு உட்பட்ட பிஞ்சுக்குழந்தைகள் அனைத்தையும்தனது கொடிய படையினர்களைக் கொண்டு வெட்ட உத்தரவிட்டான். இப்படுபாதகம் அன்று நிகழ்ந்தது!

''ராமா என்ற ஊரில் எங்கும் தாய்மாரின் அழுகுரல் கேட்கும்'' என்று வேதாகமத்தில் எழுதியது போல, பெத்லகேமில் மட்டுமல்ல, மட்டக்களப்பு, அம்பாறை உட்பட, எமது தமிழ் மண்ணிலும் நிகழ்ந்தது. பிஞ்சுக் குழந்தைகளைப் பறிகொடுத்து கதறி அழும் தாய்மார்களின் அவலக்குரல் கேட்பது எம் நெஞ்சங்களைப் பிழிகின்றன.

குழந்தைகளின் திருவதனங்களிலாவது தெய்வாம்சங்களைக் கண்டு, அதர்ம வழிகளைக் கைவிட்டு தர்மம் தழைக்க இத்திருநாள் வழிகாட்டும் வண்ணம் இறைவனை வேண்டுவோம்!

— மயூரன்

# சேவைச் செம்மல் இயேசு

# அமைதியின் அண்ணல்

மார்கழித் திங்கள் 25ம் நாள் கிறிஸ்தவ சமுதாயத்தின் அரசர், அம்மதத்தின் மாபெரும் தலைவர், மக்களின் மீட்புக்காக இம்மாநிலத்தில மனுவுரு எடுத்து வந்துதித்த உலகஇரட்சகர் இயேசுவின் பிறந்த தினத்தின் நினைவுநாள் அனைத்துலகிலுமே கொண்டாடப்படுகிறது.

உலக மீட்புக்காக ஓர் இரட்சகர் உதிப்பார்'' என்ற இறைவாக்கு நிறைவுபெற்ற நந்நாளையே கிறிஸ்தவ உலகம் இன்று மகிழ்ச்சிப்பெருக்குடன் நினைவு கூருகின்றது.

நள்ளிரவில் காற்றினில் மிதந்து வந்தது ஓர் இனிய கீதம்; ''உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக உலகிலே நல்மனதோர்க்கு அமைதியும் ஆகுக'' (லூக் 2. 14) வையகமே வாஞ்சையுடன் கிறிஸ்துவின் வருகையை எதிர் நோக்கியிருந்தது அமைதியின் அண்ணல் இயேசு அவதரித்துவிட்டார் எனும் நற்செய்தியை அனைத்துமக்களுக்கும் அறியத் தருவதே அன்றுவந்த வான தூதர் குழாமினது இனிய கீதத்தின் குறிக்கோள். இயேசு அவனிக்களிக்க வந்த அமைதி விளைவிக்க விரும்பாததாலோ ஏழை எளியோர், சிறுபான்மையினர் முதலியோர் மட்டில் தாங்கள் நீதியுடன் நடக்கவேண்டிய தங்கள் கடமையைச் செய்யத் தவறுகின்றனர். அமைதிக்காக ஏங்கிநிற்கும் நம்மக்கள் வாழ் நம்பிக்கைஎன்னும்ஒளியைவில் ஏற்றி நம்மனைவர்ருக்கும் நிம்மதிமான சுபீட்சமான ஒளிமயமான ஒருவாழ்வுக்கு இவ்வாண்டு நாம் கொண்டாடும் நத்தார்விழா வழிகோல வேண்டுமென்பது எனது வேண்டுதலும் ஆசியும்.



எனவேண்டி, கிறிஸ்துவின் அமைதி அவனியிலும் மக்களின் உள்ளங்களிலும் நிலவ நீதிநிலை நாட்டப்படவும் இறைபாலன் இயேசுவின் ஆசியை ஆகிப்போமாக.

**லோ. வ. இராயப்பு மா. ம. தி.**

ஆண்டவன் அவனியில் அவதரித்தது அனைத்து மக்களுக்கும் வாழ்வளித்து அவர்களை நல்வழியில் இட்டுச் செல்லவே பிறரின் துன்பத்தைத்துடைக்கவே இறைமகன் இயேசு மனுவுரு எடுத்தார், சேவை ஆற்றினர். அதே பணியைப் புரியும் தூதுவர்களாகும்படி கிறிஸ்தவ மக்களாகிய நம்மையும் இயேசு பணிக்கிருர். கிறிஸ்துவினது அன்புப்பணி புரியும் திட்டத்தில் கிறிஸ்தவர்களாகிய நம்மனைவருக்கும் பங்கும் கடமையும் உண்டு என்பதைப்பற்றி நாம் சிறப்பாக இன்றைய சூழ்நிலையில் இக்கால கட்டத்தில் ஆழமாகச் சிந்தித்துச் செயலாற்ற அழைக்கப்படுகிறோம்.

சேவைச்செம்மல் இயேசு பிறந்த விழா அமைதியின் அண்ணல் அவனியில் அவதரித்த நாளாகவும் அமைகிறது. கிறிஸ்து பிறந்த அந்த இன்று இல்லை. காரணம் நல்மனம் படைத்த மக்களின் எண்ணிக்கை இன்றுகுறைந்து விட்டது.

இன்றைய உலகின் நிலையை நாம் ஆழ்ந்து சிந்திப்போமானல் நாம் கவலையும் அச்சமும் அடையாதிருக்கமுடியாது. எங்கு பார்த்தாலும் குழப்பமும் கொந்தளிப்பும் அரசுகள் மத்தியில் அமைதியில்லை. அன்புடனும் சகோதர வாஞ்சையுடனும் வாழ வேண்டிய மக்கள் உள்ளங்களில் கள்ளம், கபடம், பதவி மோகம், பொறாமை, குறுகிய மனப்பான்மை முதலியனவே குடிகொண்டிருக்கின்றன. கிறிஸ்தவ மக்களாகிய நாமும் இவைக்கு விதிவிலக்கல்ல. நம் மதத்தலைவர்களுள் பலர் தானும் நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்டுவதற்குப் பதிலாக அரசியல் தலைவர்களுக்கு அஞ்சியோ அன்றேல் அவர்களுக்கு மனத்தாங்கல்

## யாழ். மாவட்டத்தில்

# வீட்டுத்தோட்ட செய்கை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வீட்டுத்தோட்டச் செய்கை அதிகரித்துவருவதாக கமத்தொழில் சேவைத் திணைக்களம் மதிப்பீடுசெய்துள்ளது.

சகல வீடுகளிலும் மக்கள் தாமாகவே கத்தரி, மிளகாய், வெண்டி, கீரை வகைகளைப் பயிரிட்டு வருவதாக மதிப்பீடு தெரிவிக்கின்றது.

காய்கறிகளின் உற்பத்திச் செலவீனம் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் தமது உற்பத்தி பொருட்களை அதிகரித்த விலையில் விற்பனை செய்வதால் வீட்டுத்தோட்டச் செய்கை பிரபல்யம் பெற்று வருகின்றது. (எஸ்)

## தனியார் ஊர்தி:

# தகுதிச் சான்றிதழ் வழங்க ஏற்பாடு

(மானிப்பாய்)

வடக்கு கிழக்கு மாகாண சபையின் எல்லைக்குட்பட்ட வியாபார பதிவினைக்கொண்ட தனியார்துறை ஊர்திச்சாலைகளிடமிருந்து பொதுசேவை மாதிரியான வாகனங்களுக்கு தகுதிசான்றிதள்கள் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பம் செய்வோர் மீளளிக்கப்படாத முற்பணத் தொகையாக காசோலை ரூபா 250/-டன் எதிர்வரும் ஜனவரி மாதம் 16ந் திகதிக்கு முன் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம். வடகிழக்கு மாகாணசபை, உள்துறை வீதி, திருகோணமலைஎனவிண்ணம் செய்யுமாறு கேகப்படுகின்றனர். (71)

# அறவழி நூலகம்

# 1-வது ஆண்டுவிழா

சமுதாய மேம்பாட்டுத்திட்டங்கள் பலவற்றை சிறப்பாக செயற்படுத்தி வரும் அறவழிப் போராட்டக்குழுவினுல் நடத்தப்பட்டுவரும் அறவழி பொது நூலகம் மாதிரி சிறுவர் நூலகம் ஆகிய இரு நூலகங்களினதும் முதலாவது ஆண்டு விழா இன்று எளிமையான முறையில் கொண்டாடப்படுகிறது.

**- வனிதா -**

இக்குழுவின் நிர்வாக இயக்குனராகவும் செயலாளராகவும் கடமையாற்றி வருகின்ற திரு. க. ஜீவகதாஸின் முயற்சியினுல் உருவாக்கப்பட்ட நூலகசேவை இன்று பெருவிருட்சமாக பொதுநூலகமாக பரிணமித்துள்ளது.

அரச சார்பற்ற நிறுவனமொன்று தனித்துநின்று பொது நூலகம் ஒன்றினையும் நடத்துவது பாராட்டப்பட வேண்டியதே.

மருத்துவம், விஞ்ஞானம், அரசியல், புவியியல், தொழில்நுட்பம், சமயம், மொழி, இலக்கியம், பாடசாலை புத்தகங்கள், நாவல்கள், கட்டுரைகள், சிறுவர் நூல்கள் என ஆயிரக்கணக்கான தமிழ்/ஆங்கில நூல்களை தன்னகத்தே உள்ளடக்கி அறவழி நூலகம் அருஞ்சேவையாற்றி வருகிறது.

சமாதானம், சகோதரத்துவம் அன்பு அஹிம்சை சம்பந்தமான விடயங்களை மனிதனிடம் தூண்டக்கூடிய வகையில் வெளியீடுகள் அமைந்துள்ளன.

நூலகம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னுல் உயர் வகுப்பு மாணவரான தேவதாஸ் என்பவரால் ''வைகறை'' என்னும் பெயரில் கையெழுத்துப் பிரதியும் மகரந்தன் என்பவரால் 'மகரந்தம்' என்ற சுவர்ப்பத்திரிகையும் நூலகத்தில் வெளியிடப்பட்டு வருகிறது.

அத்துடன் 'நூல் வங்கி' என்னும் புதிய திட்டமும் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

தான் சார்ந்த சமூகத்திற்கு இயன்றவரையில் ஓயாது பணியாற்றிவரும் அறவழி குழுவினரின் சேவைகள் வளரவும், நூலகம் மேலும் சிறப்புறவும் வாழ்த்துகிறோம்.

## கைத்துப்பாக்கி கண்டெடுப்பு

[பூநகரி]

பூநகரிப்பகுதி கோட்டை முகாமை சூழவுள்ள வீதிகளில் துப்பரவாக்கும் முயற்சியில் பொதுமக்கள் ஈடுபட்டபோது ஒரு கைத்துப்பாக்கியும் தலைக்கவசமும் கண்டெடுக்கப்பட்டு விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## ஒய்வூதியம் பெறுவோர் பாதிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியில் பணக் கொடுப்பனவுகள் இடம்பெறுததால் இவ்வங்கியில் ஒய்வூதியம் பெறும் ஒய்வூதியக்காரர்கள் பலத்த இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். (52)

## பலதும் பத்தும்

### பாணின் விலை 5,000 கோடி மார்க்!!

போர்க்காலத்திலும் போரின் பிற்காலத்திலும் பணவீக்கம் பல மேற்கு நாடுகளின் பொருளாதாரத்தைச் சின்னபின்னமாக்கியது. முதலாம் உலகப் போரைத்தொடர்ந்து ஜேர்மனியில் ஏற்பட்டபணவீக்கம் உலகப்பிரசித்தமானது. 1920ல் அந்த விலைவாசிகள் அதிகரிக்கத் தொடங்கின. விலைமட்டம் மிக விரைவாக அதிகரித்துச் செல்லலாயிற்று. 1923ன் இறுதியில் ஒரு ருத்தல் பாண்வாங்குவதற்கு 5,000 கோடி மார்க் நாணயங்களைக் கொடுக்க வேண்டியிருந்தது. தாள் நாணய வெளியீடு எதுவித கட்டுப்பாடுமின்றி மேற்கொள்ளப்பட்டமையால் இந்நிலை ஜேர்மனியில் ஏற்பட்டது.

● ஞானி

# கோதுமை மா அனுப்புமாறு அரச அதிபர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பாண் உற்பத்திக்குத் தேவையான கோதுமை மாவையும் மற்றும் தேவையான பொருட்களையும் உடனடியாக விசேட கப்பலில் அனுப்பிவைக்குமாறும் அத்தியாவசிய சேவைகள் நாயகத்தை யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் கேட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் பொதுச்சந்தையில் கோதுமை மா இல்லாத காரணத்தால் பாண் உற்பத்தி ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

இதுவரை காலமும் கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட கோதுமைமா யாழ். மாவட்ட மக்களுக்கு வழங்கபோதுமானதாக இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. (153)

## வீரமரணமடைந்த போராளிகளுக்கு மக்கள் அஞ்சலி

(காங்கேசன்துறை)

கட்டுவன் மோதலில் வீரமரணமடைந்த போராளிகளுக்கு திரளானமக்கள் நேற்று சுன்னாகத்தில் அஞ்சலி செலுத்தினர்.

அத்துடன் மீட்கப்பட்ட இராணுவத்தின் சடலமும், கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. (86)

## புலிகளுக்கு வெற்றிவேண்டி தினமும் வழிபாடுகள்

(மாங்குளம்)

ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்றுவரும் யுத்தத்தில் விடுதலைப் புலிகளுக்கு வெற்றி வேண்டி தினமும் பூசைகள் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

விடுதலைப் புலிகளுக்கு வெற்றி வேண்டி புலோலி கிழக்கு கூழாவடி வீரபத்திர காளி ஆலயத்தில் கடந்த ஆறு மாதங்களாக தினமும் ஒரு மணித்தியாலம், 100 விளக்குகள் தூவியும் விசேட அர்ச்சனை வழிபாடும் நடைபெற்றுவருகிறது. (150)

## 20 வருடத்திற்குப் பின் மீண்டும் வேலைவாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

அரசகரும மொழிச்சட்டத்தினால் 1970ம் ஆண்டு வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு மீண்டும் வேலை கிடைத்துள்ளது.

இதனால் யாழ். மாவட்டத்தில் 1970ம் ஆண்டுவரை புடவைக் கைத்தொழில் போதனாசிரியர்களாகக் கடமையாற்றியவர்கள் இருபது வருடங்களின் பின்னர் தமது இழந்த வேலையைத் திரும்பப்பெற்றுள்ளனர்.

மீண்டும் சேவைக்கு அழைக்கப்பட்டவர்களனைவரும் 50 வயதைத் தாண்டியவர்கள். இவர்களில் 4 பேர் இறந்துவிட்டனர். (54)

## 1,200 சிறைக் கைதிகள் இன்று விடுதலையாவர்

(கொழும்பு)

நத்தார் பண்டிகையையொட்டி பொதுமன்னிப்புத் திட்டத்தின்கீழ் இன்று 1200 சிறைக்கைதிகள் விடுதலைசெய்யப்படவுள்ளனர்.

நீதியமைச்சின் சிபார்சின் பேரில் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா இதற்கானபணிப்புரையை விடுத்துள்ளார்.

நிபந்தனைகளின்படி அபராதம் கட்டாத காரணத்தினால் சிறைத்தண்டனை பெற்றவர்களே இந்த பொதுமன்னிப்பு திட்டத்தின் கீழ் விடுதலை செய்யப்படுவார்கள். (ரி)

## உணவு இறக்கும்போது — சேதமடைந்த மூன்று படகுகளுக்கு நஷ்டஈடு

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பல்களிலிருந்து உணவுப் பொருட்களை கரைக்குக் கொண்டுவரும் வேலையில் ஈடுபட்ட மூன்று படகுகள் கடற்கொந்தளிப்புக் காரணமாக இம்மாதம் 14-ந் திகதி சேதமடைந்தன.

சேதமடைந்த மேற்படி மூன்று படகுகளுக்கு நேற்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நிதியிலிருந்து நஷ்டஈடு வழங்கப்பட்டது.

படகுச் சொந்தக்காரர்களான தேவராஜா, சித்திர வடிவேலு, புவனேஸ்வரராஜா ஆகியோருக்கு தலா 16,050 13,500, 7,050 ரூபா நஷ்டஈடாகவழங்கப்பட்டது. (153)

## ஆஸ்பத்திரி பஸ் சேவை

[யாழ்ப்பாணம்]

தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் ஆகிய பகுதிகளில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்களுக்கான போக்குவரத்து வாகனசேவை நேற்று முதல் ஆரம்பமானது. (153)

## ஆசியக் கிண்ணம்: இன்றைய கிரிக்கெட்

(புதுடில்லி)

மூன்று நாடுகள் பங்குபற்றும் ஒரு நாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டி, இன்று சண்டிகாரில் ஆரம்பமாகிறது.

இன்றைய ஆட்டத்தில் இந்தியா பங்களாதேஷை எதிர்த்து ஆடுகின்றது.

வெள்ளிக்கிழமை ஆட்டத்தில் இந்தியா இலங்கையை எதிர்த்து ஆடும். [வி]

## பிணைப்பணம் கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

ஓய்வு பெற்றுப்பலவருடங்களாகியும் தமது பிணைப்பணம் இன்று வரையும் மீளளிக்கப்படாது தாமதம் செய்யப்பட்டு வருவதாக ஓய்வு பெற்ற கிராம சேவையாளர்கள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் புகார் செய்துள்ளனர்.

தமது சம்பளப்பணத்திலிருந்து மாதாமாதம் கழிக்கப்பட்டு வந்த பிணைப்பணத்தைத் திருப்பித் தருமாறு யாழ். செயலகத்தில் கோரிய போது உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு எழுத வேண்டுமென்று பதில் கிடைத்ததாம். (54)

## உணவுப் பொருள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது;

ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கையினால் யாழ். மாவட்டத்தில் காணாமற்போனவர்கள், தடுத்துவைக்கப்பட்டவர் சம்பந்தமான தகவல்கள் இதுவரை பெறமுடியாத நிலையில் இருக்கிறது. இது சம்பந்தப்பட்ட விடயமாக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ். போதனா வைத்தியசாலை, மானிப்பாய் தவிர்ந்த மற்றைய யாழ். பிரதேச ஆஸ்பத்திரிகளுக்கு உறுதிப்படுத்தப்பட்ட போதிய பாதுகாப்பு உத்தரவாதம் இல்லாதநிலை;

எரிபொருள், மின்சார விநியோகமின்மை, பத்திரிகைத் தாள், காகிததாதிகள் ஆகியவை இல்லாத காரணத்தால் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து கஷ்டப்படுகிறார்கள்.

இவையாவற்றுக்கும் உடன் தீர்வு காணுமாறு சர்வதேச குழுவிடம் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை கடிதம் மூலம் கேட்டுள்ளது. (153)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்ஸ் லேனில் மேற்கு வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு மார்கழி மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/180306/81.

## எம். ஜி. ஆர். சமாதியில் அ. தி. மு. க. தொண்டர்மீது பொலிஸார் தடியடி

[சென்னை]

எம். ஜி. ஆர். சமாதியில் அ. தி. மு. க. பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா தலைமையில் தொண்டர்கள் அஞ்சலி செய்யும்போது பொலிஸார் தடியடிப்பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைத்தனர்.

ஜெயலலிதா அஞ்சலிசெய்துவிட்டு புறப்படும்போது கைக்குண்டுடனும் துப்பாக்கியுடனும்ஒருஇளைஞர்கைதுசெய்யப்பட்டார் என்றும் பொலிசார் அவரை அழைத்துச் சென்றனரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

அந்த இளைஞர் செல்வி ஜெயலலிதாவை தான் தாக்க வந்ததாக கருதிய கூட்டம் தங்களிடம் அந்த இளைஞனை ஒப்படைக்க வேண்டுமென்று கல்வீச்சில் ஈடுபட்டதாகவும் அதனைத்தடுக்கவே காவல் துறையினர் அ. தி. மு. க. தொண்டர்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்ததாகவும் கூறப்பட்டுகிறது.

பொலிசார் அந்தஇளைஞனை விசாரித்தபோது அவர் எம். ஜி. ஆர். ரசிகர் என்றும் கையில் நவீன கமரா வைத்திருந்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர். [மா]

## வீரமரணமடைந்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குகநாதன் - கொக்குவில் மேற்கு), 2வது லெப். அருள்நேசன் (வல்லிபுரம் பாலேந்திரன்-சாவகச்சேரி), ஜெரோம் (தருமராசா சசிகரன்-சங்கத்தானை), மித்திரன் (செல்வநாதன் பெலடிற்குமார்-ஆனைக்கோட்டை) ஆகியோர் வீரமரணம் அடைந்தனர்.

குப்பிளானில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற நேரடி மோதலில் பெண் போராளியான ஜீவா [சிவபாதம் மஞ்சுளா வவுனியா] வீரமரணமடைந்தார்.

22-ம் திகதி கட்டுவனில் இடம்பெற்ற தாக்குதலில் படுகாயமடைந்த நளினிகாந்தி (பண்டிதநாதன்கவிதா முல்லைத்தீவு) நேற்று வீரமரணமடைந்தார்.

இராணுவ மோதல்களின் போது வீரமரணமடைந்த இப் போராளிகளுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (வி)

## மாவிட்டபுரத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த நான்கு போராளிகள் வீரமரணம் அடைந்தனர். (வி)

## இம்மாதம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்களைச் சேர்ந்தவர்கள் தமது பங்களிப்பை செலுத்துவதற்கு வசதியாக இம்மாதம் 27-ம், 28-ம் திகதிகளில் மீட்பு நிதி திரட்ட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பங்களிக்க விரும்பும் நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தோர் இம்மாதம் 27-ம் திகதியும் உடுவில் சங்கானை தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தோர் இம்மாதம் 28-ம் திகதியும் காலை 9-30 மணிக்கும் நண்பகல் 12-00 மணிக்கும் இடையில் கோண்டாவிலின் அமைந்துள்ள விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயலகத்துடன் தொடர்ந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். [ரி]

## இராணுவம் சுட்டு ஒருவர் பலி

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள விநாயகர்புரததில் வசிக்கும் தவம் என்பவர் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். (வி)

## நொச்சியாகமத்தில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

பேய்மடு இராணுவமுகாமிலிருந்து இராணுவத்தினர், நொச்சியகாமம் இராணுவ முகாமுக்கு ஜீப், ட்ரக், பவல் வாகனங்களில் சேர்ந்து சென்ற இராணுவத்தினர்மீது விடுதலைபுலிகள் பதுங்கியிருந்து தாககியதில் ஆறு இராணுவத்தினர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர்,

இத் தாக்குதலில் ட்ரக் வண்டி முற்றாக எரிந்து சாம்பலானது, பவல் வாகனம் நகரமுடியாத நிலையில் சேதமடைந்தது. படுகாயமடைந்த இராணுவத்தினரை ஜீப் வண்டியில் ஏற்றிக்கொண்டு இராணுவத்தினர் பின்வாங்கியதாக கூறப்படுகிறது.

இராணுவத்திடம் இருந்து ரி 56-1 ஒன்று, ரி 56-2 ஒன்று, ரி 56 பட்மோடல்-2, ஏ கே. மகசின்-14, ஜே. ஆர். கைக்குண்டு-3, இன்மீறன்-128, கோல்ஸர்-3 ஆகிய ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

இம்மோதலில புலிகள் தரப்பில் லெப். சசி (மாங்குளம்) வீரமரணம் அடைந்தார்.

முன்னர் வீரமரணமடைந்த மேஜர் பிரின்ஸ்ஸின் 31-வது நினைவுநாளாக கடந்த 22-ம் திகதியே மேற்படி மோதல் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (வி]

## யாழ். மாவட்டந்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அச்சுவேலி, வண்ணார்பண்ணை ஆகியவை புதிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாக உருவாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக யாழ். மாவட்டத்தில் 20 உதவி அரசாங்க அதிபர் பிரிவு உருவாகவுள்ளதாகத் தெரியவருகிறது. (153)

## ஹொரவப்பொத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இச் சம்பவத்தில் 19 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ஆறு இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்த இராணுவத்தினரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

சிங்கள மக்கள் வாழும் பகுதியில் நடைபெற்ற இத் தாக்குதலினால் ஒரு யானையைப் புதைக்க கூடியளவான கிடங்கு ஒன்று ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (வி)